முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் இல்லை. 1ம் பிரதிவாதி ஆஜர் . வாதி தரப்பு வழக்கறிஞர் மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

அ.வ.எண். 536/2022

பி.வா.சா.1 பிரசாத் த/பெ.செங்கோட்டுவேல்

<u>வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>

1. 2ம் பிரதிவாதி தனியாக எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றுசொன்னால் சரிதான். எனது வழக்கு படி எனது தயார் எழுதி கொடுத்ததாக சொல்லும் உயில் பற்றி தகப்பனாருக்கு தெரியுமா என்றால் சரிதான். உயில் எழுதும் பொழுது எனது தந்தையார் என் தாயாருடன் இருந்ததாக என் தகப்பனார் என்னிடம் கூறினார்.

2. என் தாயார் எழுதிகொடுத்ததாக சொல்லும் உயில் முதல் முதலாக வெளிஉலகத்திற்கு வந்தது எப்போது என்றால் எனக்கு தெரிந்து 11.08.2019 அன்றுதான் எனக்கு தெரியும்.உயிலின் தேதி 20.08.2018 என்றால் சரிதான். என் தாயார் இறந்த தேதி 09.02.2019என்றால் சரிதான். என் தாயார் இறக்கும் வரை உயிலை பற்றி அவர் என்னிடம் சொல்லவில்லை என்றால் யாருமே என்னிடம் சொல்லவில்லை.

3. உயிலை பற்றி முதன்முதலாக தெரிவித்தது யார் என்றால் என் குடும்ப நண்பர் தங்கராஜ் மூலமாக தெரிய வந்தது. அந்த உயிலின் எத்தனை நபர்கள் சாட்சி கையொப்பம் இட்டார்கள் என்றால் மூன்று குடும்ப நண்பர்கள் சாட்சி கையொப்பம் இட்டார்கள். அவர்கள் பெயர்கள் என்னவென்றால் தங்கராஜ், செந்தில் மற்றும் விஜயகுமார் ஆவார்கள். எனது தகப்பனார் உயிலில் சாட்சி கையொப்பம் இடவில்லை என்றால் சரிதான்.

4. இந்த உயில் பற்றி முதன்முதலாக வா.சா.ஆ.4ன்படி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதன் படி என் தந்தைக்கு எதிராகவும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். 06.09.2022 முதல் 21.09.2022 வரையிலும் 04.10.2023 முதல் 20.10.2023 வரையிலும் என் தகப்பனார் உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பெற்றார் என்றால் சரிதான். என் தகப்பனார் 03.11.2023 தேதியில் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

5. பி.வா.சா.10, பி.வா.சா.11, பி.வா.சா.12, பி.வா.சா.23, பி.வா.சா.24, பி.வா.சா.25 ஆகிய ஆவணங்கள் இந்த வழக்கிற்கு சம்மந்தமில்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. பி.வா.சா.1 ஆவணத்தில் உள்ள 2வது பக்கத்தில் என் தாயாருக்கு கடந்த சில வருடங்களாக வயிற்றில் புற்றுநோய் இருந்து வருகிறது என்ற வாசகம் உள்ளது என்றால் சரிதான். வா.சா.4 பத்தி 3ல் 2010 காலகட்டத்தில் என் தாயார் வயிற்றில் இருந்து அகற்றப்பட்ட கட்டியை பாயப்சிக்கு அனுப்பி முடிவு பெறப்பட்டதில் புற்றுநோய் என்று உறுதிசெய்யப்பட்டது என்றால் சரிதான்.

6. வா.சா.4 பத்தி4ல் 2016 காலகட்டத்தில் என் தாயாருக்கு வலது மார்பில் ஏற்பட்ட வலி மற்றும் திரவம் குறித்து மருத்துவ பரிசோதனை செய்ததில் அவருக்கு புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.4 பத்தி 4ல் என் தாயாருக்கு வலது மார்பில் புற்றுநோய் கண்டறியபட்டது என்றால் சரிதான். என் தாயார் இறந்ததிற்கு என் குடும்ப நண்பர் தங்கராஜ் வந்திருந்தாரா என்றால் சரிதான். அந்த சமயம் இந்த உயிலை பற்றி கூறவில்லை என்றால் அவர் கூறவில்லை. என்னுடைய குல வழக்கப்படி இறந்தவருக்கு 16ம் நாள் சடங்கு செய்யும் முறை உண்டா என்றால் உண்டு.

7. பி.வா.சா.1ன் படி எனக்கு இரு கட்டளைகள் விதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த இரு கட்டளைகளையும் நான் நிறைவேற்ற வில்லை என்று சொன்னால் ஒரு கட்டளையை நிறைவேற்றி விட்டேன் மற்றொரு கட்டளையை நிறைவேற்றவில்லை காரணம் வங்கி என்னை பணம் கட்ட அனுமதிக்கவில்லை. எந்த கட்டளையை நிறைவேற்றியுள்ளேன் என்றால் 3 1/2 பவுன் எனது மூத்த சகோதரிக்கும் 6 பவுன் எனது இளைய சகோதரிக்கும் என் தகப்பனார் மூலம் காசோலை கொடுத்தேன்.

8. அந்த காசோலைகள் என் தகப்பனார் வங்கி கணக்கில் இருந்து எனது தகப்பனார் கையொப்பம் இட்டு கொடுக்கப்பட்ட காசோலைகள் என்றால் சரிதான். வங்கிக்கு வரையோலையாவோ காசோலையாகவோ பணம் செலுத்தவில்லை என்று சொன்னால் அதற்கான நடவடிக்கை எடுத்தேன் ஆனால் வங்கி என்னை அனுமதிக்கவில்லை.நான் பணம் கட்டுவதற்கு

தயாராக உள்ளேன். ஆனால் வங்கி மறுத்ததிற்கு வழக்கிறிஞர் அறிவிப்போ அல்லது தனிப்பட்ட முறையில் நான் அனுப்பிய தபாலோ ஆவணங்களாக உள்ளதா என்றால் 2 முறை கடிதம் கொடுத்து அதற்கு அஞ்சலக ஒப்புகை அட்டை வைத்துள்ளேன். நான்அனுப்பியதாக சொல்லும் கடிதங்கள் மற்றும் அஞ்சலக ஒப்புகை அட்டைகளை ஆவணங்களாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

9. என் தாயார் இறந்த பிறகு வாரிசு சான்றிதழ் பெற்றேனா என்றால் பெற்றுள்ளேன். அந்த வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்குரிய பட்டா , சிட்டா ஆவணங்களில் தற்போது வரை என் தாயார் பெயர்தான் உள்ளது என்றால் நான் மனு கொடுத்து அந்த மனு நிலுவையில் உள்ளது. என் தாயார் இறந்து எவ்வளவு நாட்களில் மேற்கண்ட மனுவை வருவாய் துறையில் கொடுத்தேன் என்றால் சுமார் 2 வருடங்கள் கழித்துதான் மனுகொடுத்தேன்.

10. மனுவிற்கு பின்னிட்டு என்னை வருவாய் துறையில் விசாரணை மேற்கொண்டார்களா என்றால் விசாரித்தார்கள் மற்ற வாரிசுதாரர்களை விசாரித்தார்களா என்றால் எனக்கு தெரியாது. 11.08.2019 முதல் இந்த வழக்கை தாக்கல் செய்யும் வரை பி.வா.சா.1ன் அசல் என் கைவசம்தான் இருந்தது என்றால் சரிதான். என் வழக்கு தரப்பில் சாட்சிகளின் பட்டியலை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

11. உயில் படியான கட்டளைகளை நான் நிறைவேற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த உயில் படி எனக்கு எந்த விதமான உரிமையும்

கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. அந்த உயிலில் கண்டுள்ள 3 சாட்சிகளும் என் உறவினர்கள் அல்ல என்று சொன்னால் சரிதான்.

மேற்படி வாதிகள் தரப்பு கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

**வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

அ.வ.எண். 536/2022 நாள்.23.09.25

முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர். பிரதிவாதி ஆஜர். வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண். 12/2024

வா.சா.1

முதல்விசாரணை தொடர்ச்சி:-

தாவாபடி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

1. அசல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. அசல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3. அசல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
4. அசல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
5. அசல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
6. அசல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
7. அசல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
8. அசல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தாவாபடி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.